செ.வெ.எண்-14 நாள்-09.04.2018

# பத்திரிக்கைச் செய்தி

**விளையாட்டு விடுதிகளில் மணவ, மாணவியர் சேர்க்கை**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கீழ் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் புரிவதற்கு ஏற்ப நல்ல பயிற்சி, தங்குமிட வசதி மற்றும் சத்தான உணவுடன் கூடிய விளையாட்டு விடுதிகள் மற்றும் விளையாட்டு பள்ளிகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன.

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி** - மதுரை, திருச்சி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி, கோயம்புத்தூர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர், தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், உதகமண்டலம், விழுப்புரம், சென்னை, நெய்வேலி, மற்றும் நாமக்கல் ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

**மாணவியருக்கான விளையாட்டு விடுதி** - ஈரோடு, திருவண்ணாமலை, நாமக்கல், திண்டுக்கல், நாகர்கோவில், பெரம்பலூர், தேனி, புதுக்கோட்டை, தருமபுரி மற்றும் சென்னை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேற்காணும் விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுகளில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரராக விளங்குவதற்கு 7-ம் வகுப்பு, 8-ம் வகுப்பு, 9-ம் வகுப்பு மற்றும் 11-ம் வகுப்பு சேர்க்கைக்கான மாவட்ட அளவிலான தேர்வு வரும் 02.05.2018 முதல் 04.05.2018 வரை நடைபெற உள்ளது.

**மாணவர்** - 1. தடகளம் 2.இறகுப்பந்து 3.கூடைப்பந்து 4.குத்துச்சண்டை 5.கிரிக்கெட் 6.கால்பந்து 7.வாள்சண்டை 8.ஜிம்னாஸ்டிக்ஸ் 9.கைப்பந்து 10.ஹாக்கி 11.நீச்சல் 12. டேக்வோண்டோ 13.வாலிபால் 14. பளுதூக்குதல் 15.கபாடி 16.மேசைப்பந்து 17.டென்னிஸ் 18.ஜீடோ 19.ஸ்குவாஷ் மற்றும் 20.வில்வித்தை

**மாணவியர்** -1. தடகளம் 2. இறகுப்பந்து 3. கூடைப்பந்து 4. குத்துச்சண்டை 5.கால்பந்து 6.வாள்சண்டை 7.கைப்பந்து 8.ஹாக்கி 9.நீச்சல் 10.டேக்வோண்டோ 11.வாலிபால் 12.பளுதூக்குதல் 13.கபாடி 14.டென்னிஸ் 15.ஜீடோ மற்றும் 16.ஸ்குவாஷ்

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்டுள்ள மாணவ / மாணவியர் அதற்கான உரிய படிவங்களை மார்ச் 26.03.2018-ஆம் தேதி முதல் அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்களை அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 2018-2019 வருட சேர்க்கைக்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்திடவும், விளையாட்டு விடுதி சார்பான விவரங்களை www.sdat.tn.gov.in என்ற இணைய தள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மாவட்ட விளையாட்டு அரங்கம், (லெஷ்மி தியேட்டர் எதிரில்) இராஜாஜி நகர், அரியலூர் வருகின்ற **20.04.2018 க்குள்** சமர்ப்பிக்க வேண்டும். மேலும், விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் அரியலூர் அவர்களை 7401703499 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**